**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்</u>**

**முன்னிலை: திரு.P.வேல்முருகன்,B.A., B.L.,**

**கூடுதல் மாவட்ட நீதிபதி**

**திண்டுக்கல்.**

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2–ம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.2/2024**

**in**

**O.S.No.234/2021**

ராமதிலகம்

.... மனுதாரர்/பிரதிவாதி

**–எதிரிடை–**

B.கார்த்தி .... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது கடந்த 13.08.2025–ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.B.பிரபாகர்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.மணிவண்ணன்** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதிவரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர் தரப்பில், மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ளக் கோரி உரிமையியல் நடைமுறை சட்ட கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

வழக்கானது எதிர்மனுதாரரால் இந்த மனுதாரர் மீது அடமானத் தொகையை திரும்பப் பெறுவதற்கான வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில்

எழுத்துப்பூர்வ அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். இதன் விளைவாக, வழக்கு 08.02.2022 முதல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது, எதிர்வாதி / வாதி தனது வாதங்களில் திருத்தம் செய்ய I.A. No. 1/2023 மனுவை தாக்கல் செய்து மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டது. அதன் பிறகு, வழக்கு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 12.06.2024 மற்றும் 16.07.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டது. அப்போது, வயது மற்றும் கொடிவழி ஜாபிதா பிரச்சனை காரணமாக, மதுரையில் உள்ள வழக்கறிஞரை தொடர்பு கொண்டு, கூடுதல் எதிர்வழக்குரையை தயார் செய்து தாக்கல் செய்ய முடியவில்லை. கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும்.

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**:–

எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை. 16.07.2024–ஆம் தேதி கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் விடுபட்டுபோனது, தெய்வாதீனமாக ஏற்பட்டது என்பது மறுக்கப்படுகிறது. தாவா வழக்கினை திருத்தம் செய்யக் கோரி IA.No.1/2023 மனு தாக்கல் செய்து கடந்த 19.03.2024–ஆம் தேதி allow ஆகியுள்ளது. கூடுதல் எதிர்வழக்குரைதாக்கல் செய்ய 12.06.2024 மற்றும் 16.07.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டது. மேற்படி தேதிகளில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு, தற்போது பொய்யான காரணங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளது சரியல்ல. மேலும், ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கும், தற்போது தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கும் வேறுபாடு உள்ளது. எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா ? என்பதேயாகும்.

5. **தீர்வு** : மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கவனமாக கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

6. தாவா வழக்கானது அடமானத் தொகையை செலுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்டு, 16.12.2021–ஆம் தேதி எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, 16.12.2021–அன்றே எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன. 22.08.2023–ஆம் தேதி வழக்குரையை திருத்தம் செய்யக் கோரி I.A.No.1/2023 தாக்கல் செய்யப்பட்டு, பல்வேறு வாய்தாக்கள் வழங்கப்பட்டு, கடந்த் 01.04.2024–ஆம் தேதி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 12.06.2024 மற்றும் 16.07.2024 ஆம் தேதிகளில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

7. வாதி தரப்பில் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்தும் எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகளுக்கு விரோதமானதாக தற்போது கூடுதல் எதிர் வழக்குரையில் உள்ளது. ஆனால், வாதியை பாதிக்கக் கூடிய வகையில் என்னென்ன புதிய சங்கதிகள் கூடுதல் எதிர்வழக்குரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பது எதிருரையில் குறிப்பிட்டு கூறப்படவில்லை. மேற்கண்ட வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, வழக்கு விசாரணை தற்போதுவரை தொடங்கவில்லை என்பதால் நீதியின் நலன் கருதியும், கூடுதல் எதிர் வழக்குரையை ஏற்றுக் கொள்ளப்படுவதால் வாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பதாலும், வழக்கை முழுமையான

விசாரணைக்கு உட்படுத்தி வழங்கப்படும் தீர்ப்பு தான் இருதரப்பினருக்கும் அறுதியான தீர்வை கொடுக்கும் என்ற காரணத்தினாலும். பன்முக வழக்குகளை தவிர்க்கவும், உண்மையைக் கண்டறியவும், அதில் சம்பந்தப்பட்ட முழுமையான தகராறுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கவும், ஒரு நியாயமான விசாரணையை உறுதிப்படுத்தவும், சரியான நேரத்தில் நீதியை உறுதிப்படுத்தவும் இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025–ம் வருடம் செப்டம்பர் மாதம் 02–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P.VELMURUGAN Digitally signed by P.VELMURUGAN Date: 2025.09.02 17:47:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

P.VELMURUGAN Digitally signed by P.VELMURUGAN Date: 2025.09.02 17:47:41 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.